# யாதுமாகி...

(ஆளுமையின் ஓர் அங்கம்)

*முதுகலைத் தமிழாய்வுத்துறையின் மாதாந்திர மின்னிதழ்*

**மலர் – 1**

**ஆகஸ்ட் – 2023**




**முதுகலைத் தமிழாய்வுத்துறை**

**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)**

**தேசியத் தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது**

**(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)**

**திருச்சிராப்பள்ளி – 620020**

**தமிழ்நாடு, இந்தியா**

| | | |
|---|---|---|
| இதழ் | : | யாதுமாகி |
| முதன்மையாசிரியர் | : | முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,<br>தேர்வு நெறியாளர்,<br>இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத் தலைவர். |
| இணை ஆசிரியர் | : | முனைவர் வ.முஹம்மது யூனுஸ், இணைப்பேராசிரியர் |
| துணை ஆசிரியர் | : | திரு. க.இம்தாதுல்லாஹ், இணைப்பேராசிரியர் |
| பொறுப்பாசிரியர் | : | திரு. வீ.விஜய்<br>உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை. |
| பிரதி | : | மின்னிதழ் |
| வெளியீடு | : | ஆகஸ்ட் 2023 |


---


*இதழாசிரியர் குழு*

முனைவர் த.செல்வராசு

முனைவர் ஷே.நாகூர்கனி

திரு. கா.முகமது இஸ்மாயில்

முனைவர் மு.சாதிக்பாட்சா

முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ்

முனைவர் க.சிராஜுதீன்

முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு

முனைவர் க.இக்பால்

முனைவர் மு.ஹ.ஜஹானாரா

*மாணவ ஒருங்கிணைப்பாளர்கள்*

ப.அ.முஹம்மது ஆதில் முர்ஷித்

ஷா.முஹம்மது அஸ்ரின்

ஜோ.ஜார்ஜ் இம்மானுவேல்

பி.லீ.தயாநிதி

ஷா.முகமது அர்ஷத்

ஜா. முகமது இலியாஸ்

மு.யாசர் அராபத்

மு.முகமது இமாதுதீன்

ச.ஆதித்யன்

ரா.பிரீத்தி

ம.தாரணி

செ.ராகவி


---

காலமும் களமும்
அரிதெனப்படுவது
ஆயினும்
கடந்து விடப்படுகிறது
எளிதென...
காலம் கால் அசரவுமில்லை...
களம் கானல் நீருமில்லை...
காலமும் களமும்
கண் தென்படும்,
கைக்கெட்டும்
அங்காளி பங்காளிகள் தான்.
அழையா விருந்தாளிகளன்று.

கண்கெட்டு சூரிய நமஸ்காரம் ஏன்?
காலத்தே களமாட,
காலம் தரும் ஆளுமையென
களம் புகுந்திட
'யாதுமாகி' நிற்கிறது
தமிழ்.

– **வீ.விஜய்**
(பொறுப்பாசிரியர்)

## அப்பா

"அப்பா ஏழையாக இருந்தாலும்
நம்மை ஒருபோதும் ஏழையாக
வளர்க்க நினைப்பதில்லை "...

"சாப்டியா என்பது
அம்மாவின் பாசம் என்றாலும்
சாப்பிட்டானா கேளு என்பது
அப்பாவின் பாசம் "...
"நூறு தாய்மைக்கு சமம்...
ஒரு தகப்பனின்
கண்டிப்பும்
கருணையும்...
அன்பும்...!



"தாங்கி பிடிக்க தாயும்
தூக்கி நிறுத்த தந்தையும்
இருக்கும் வரை
எந்த உறவும்
வீழ்ந்து போவதில்லை...."

"மழலை மொழி
தாய்க்கு புரியும்
தகப்பனின் மொழி
மகளுக்கு மட்டுமே புரியும்...."

"சில நேரங்களில்
பகைவன் போல தெரிந்தாலும்
உனது பாசத்தை மிஞ்ச...
யாரும் இல்லை இவ்வுலகில்
என் அன்பு அப்பா....!

"உன்னை எதிர்பார்த்து
பெற்றெடுப்பவள் அன்னை...
உன் எதிர்காலத்தை
பெற்றுதருபவன் தந்தை...

"பெண்களுக்கு பாதுகாப்பு
என்றவுடன் நினைவிற்கு வரும்
முதல் ஆண்
தன் தகப்பன் தன்..."

"என்னை மட்டுமல்ல
என் கனவுகளையும்
சுமந்துகொண்டு
நடக்கிறார் என் அப்பா!"

"தான் கற்றதை விட
தன் பிள்ளைகள் அதிகம்
கற்க வேண்டும் என்பது
நினைப்பது அப்பா மட்டுமே.....!



கார்த்திக்குமார். க
முதுகலை முதலாமாண்டு

## தகப்பன் சாமி

உலகின் முடிவில்லா பகுதி…
எங்கும்
நிறைந்த கூச்சல்,
ஊதி அடங்கும் கனல் தகிப்பு,
கண்ணைக்கூசும் ஒளி வெள்ளம்,
இவையெல்லாம்
உன் விரல் பிடிக்கையில்
மட்டுப்பட்டுப் போகும்…
என் முகத்தை முதலில் கண்டது
உன் விழியில் தான்
என் வெற்றியின் பிரவாகம்
உன் முகத்தின் பூரிப்பில்
எனக்கே ஆன
என் உலகம்கூட
நான் கண்டது

உன் தோள்களில் தான்
அப்பா…
காட்சியில் சில பிழைகள்
கவனத்தில் சில பிழைகள்
கேள்வியில் சில பிழைகள்
பதிலில் கூட சில வினாக்கள்
அனைத்தையும் நீ
சுகம் தான் என சுமந்தாய்
தோளில் சிலுவையாய்…
உனக்குள் தைத்த ஆணிகளின்

சுவடுகள்
எங்களுக்கு தெரியும்
அதை நீ வெளிப்படுத்தவில்லை
காரணம் **நீ அப்பா…**

தீபாவளி,
பொங்கல்,
ஆடி என அனைத்திற்கும்
புத்தாடை
கொண்டாட்டம்
அப்போதும் நீ
சிமெண்ட் பூசி காய்ந்த கை,
அழுக்கேறிய கைலி,
காலில் ரப்பர் செருப்புடன் தான்
காரணம்
**நீ அப்பா…**
உன்னை எனக்குள்
அமிழ்த்துக் கொண்டேன்
சங்கமம் ஆனாய்
சில நேரங்களில் உன்னை மீறிய கோபம்
அதன் தடங்கள்
என்மீதும் விழும்
இப்போது அவை என்னை ஆற்றி இருக்கின்றன
அது நீயாய் இருந்து
என்னுடன் பேசுகின்றன
அப்பா…
என்வாழ்வின்
பாதையில்
இரண்டு பாதச் சுவடுகள்
ஒன்றை நான்
கண்ணீரால் நனைக்க நினைக்கிறேன்
அதன் ஆண்டுகடந்த ஆழமான
வெடிப்புகளையும் கூடத்தான்
அப்பா…
வாழ்வின் சூறாவளியில்
சில நேரம்
ஓங்கி அழுகிறேன்
வீழ்ந்து நொறுங்குகிறேன்
தூக்கி எறியப் படுகிறேன்
பின் என்னைத்
தேற்றிக்கொள்கிறேன்
தடுமாறி எழுகிறேன்
நிற்க முயலுகிறேன்
காரணம் நீ
அப்பா…
என்னுள்
சில எட்டாத கனவுகள்
உண்டு
உன்னை மீண்டும்
எப்போது
அழைப்பேன்
அப்பா என்று
அப்பா…



பி. லீ தயாநிதி
முதுகலை இரண்டாமாண்டு

## ஒருதலைக் காதல்

பாவி மகன் மனசுக்குள்ள
பூட்டிவச்ச செய்தி ஒன்னு
மாட்டிக்கிட்டு முழிக்குதடி

சேர்த்துவச்ச கவிதை எல்லாம்
சித்திரமா சிரிக்குதடி

எழுதிவச்ச பாட்டு ஒன்னு
எடுத்துக்காட்டாய் இருக்குதடி

திருடி வச்ச ரோஜாக்கூட
திருத்திருன்னு முழிக்குதடி

ஓரக்கண்ணால் ஒருப்பார்வை
பார்த்த சேதி நினைவிருக்கா

உன் வீட்டுப்பக்கம் நானும் சுத்தி
மாட்டிக்கிட்டோம் நினைவிருக்கா

கோடை வெயிலின் கொடூர மழையின்
வாடைக்காற்றின் வாசமாய் வந்தாய்
என் சுவாசமாய் நின்றாய்

க. கமர்நாத்
முதுகலை இரண்டாமாண்டு



## முதல் மழையும் முதல் காதலும்...

முதல் மழையும்
முதல் காதலும் ஒன்று ...
வந்த செய்தி தெரிஞ்ச்சாக்கா
குடை பிடித்து பாதுகாப்பேன்

பிடித்த குடையை
ஓட்டை ஆக்கினாலும்



சொட்டு சொட்டாய்
நெற்றிப் பொட்டில்
பட்டுப் பட்டு
தெறித்து விழுந்தாலும்

கட்டுப் பட்டு
ஓட்டை மறைக்கும்
புத்தன் மகன் நானடி

ஆனால் நீயோ

பனம் இல்லாத
நேரம் பார்த்து
கூட்டமாய் வரும்
விருந்தாளிப் போல

மொத்த மொத்தமாய்
நீயும் வந்தாய்

செத்த நாழியில்
என்னை வென்றாய்

முத்த வாடையால்
உள்ளே வந்தால்

பித்து பிடிக்குது
எந்தன் மனமே

– ஷா. முஹம்மது அர்ஷத்

முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு

## புத்தகம்...

"ஒரு நல்ல புத்தகம்
திறந்து கொண்டால்
சொர்க்கத்தின் வாசல் திறந்துவிடும்
புத்தகம் படிப்போர் அனைவரும்
சொர்க்கத்திற்கு சென்றுவிடலாம் "

"இன்று
புத்தகம் படித்து
நம் மதியை வலுவமைத்துவிட்டால்
நாளை
நம் விதியை பற்றி
கவலைப்பட தேவையில்லை "

"புத்தகத் தாளில் உள்ள சிறப்பை
அறிந்திருந்தால்
யார் காலில் உள்ள சிறப்பையும் அறியத்
தேவையில்லை"



"புத்தகத் தாளை
நம்பி வாழ்ந்தால்
யார் காலையும்
நம்பி வாழத்
தேவையில்லை"

"புத்தகத்தில் உள்ளது சொற்களல்ல
அறிவின் கற்கள்!
புத்தகத்தில் உள்ளது தொடர்களல்ல
அறிவின் சுடர்கள்!
புத்தகத்தில் உள்ளது பத்திகளல்ல
கவிஞனின் புத்திகள்!
புத்தகத்தில் உள்ளது வினாக்களல்ல
நாளைய கனாக்கள்!
புத்தகத்தில் உள்ளது விடைகளல்ல
விதைகள்! விதைகள்! விதைகள்"

வி.ஹரிஸ்ராஜ்..

முதுகலை முதலாமாண்டு

## புன்(ண்)னகை

என் முகம் எப்போதும்
புன்னகைத்து கொண்டே இருக்கும்
காரணம் இன்பத்தால் அல்ல
உன்னால் ஏற்படும் துரோகத்தால்..

கேலிக்கு உள்ளாகிறேன்
உங்களின் இன்ப
விருந்திற்க்காக,
நானும் பயனிக்கிறேன்
(புண்)நகையுடன்
மனமருந்திற்க்காக...

சிரி என சொல்கிறாய்
என் சிறு இதயம்
நொறுங்கிய பின்...

சிரிப்பவனிடம் கேள்,
சிரிப்பிற்கு பின்னால்
உள்ள
வலிகள்
என்னவென்று...!

நான் அழுது
தாய் சிரிக்கும்
தருணம்,
அவள்
உலகத்தை வென்றத்
தருணம்...!

சூரியனின் சிரிப்பு
காலையில்
தெரியும் ,
நிலவின் சிரிப்பு
ராத்திரியில்
தெரியும் ,
மனிதனின் சிரிப்பு
பிறரின் வீழ்வில்
தெரியும் ...!

நட்சத்திரங்கள்
பல் இழித்து
சிரிக்கிறது
நிலவின்
வருகையை எண்ணி...?

காரியவாதியின்
சிரிப்பு ,
உன் கால்களை
வாறிவிடுவதன்
முன்
அறிவிப்பு...!



கலப்பட உலகில்
கலப்படம் இல்லா
சிரிப்பு,
குழந்தையின்
புன் சிரிப்பு...!

ஒருவரை
மகிழ்விக்க வைக்க
இன்னொருவரை
காயப்படுத்துவதற்கு

பெயர்தான்,
சிரிப்பு...!

வே.விக்னேஷ்வரன்,
முதுகலை முதலாமாண்டு

## பிரியாவிடை...

அன்றையநாள் சென்றதெப்படி?
பிரிவதற்கு ஒரு மாதம் முன்பே,
பிரியாவிடை நிகழ்வு.
அன்றையநாள் சென்றதெப்படி?
இனி வாரா நொடிகள்!
ஒரே வண்ணச்சட்டையோடு
ஓயாமல் ஆட்டம்!
பாட்டிற்கு விசில்,
விசிலிற்குப் பாட்டு!
பாட்டோடும் விசிலோடும்
ஆசானுக்கு ஆரவாரம்
சேர்ந்திருப்போமெனச்
சேர்ந்தெடுத்தப் புகைப்படம்!
நினைவுவரும் போது ஒரு மாதம்
சென்றுவிட்டதே என்ற புலம்பல்...
இனி
எத்தனைக் காலமோ?



ஜா.முகமது இலியாஸ்
முதுகலை முதலாமாண்டு

## அம்மா



அன்போடு அள்ளிக்கொடுத்தாய்
ஆயுளைத்தான் நீட்டிக்கொடுத்தாய்
தேகம் வருத்தி என் தேவையைத் தீர்த்தாய்
உன்பசி வாடியும் என்பசி தீர்த்தாய்
கருவில் சுமந்து உயிரைக் கொடுத்தாய்
வலிகளைச் சுமந்து வாழ்க்கைக்
கொடுத்தாய்
திரு வள்ளுவன் தந்தது முப்பால்
முக்கடலும் கலந்தது உப்பால்
இதயங்களை இணைத்தது அன்பால்
இந்த பிரபஞ்சத்தில்
உயிர்களனைத்திற்கும்
உயிரோட்டமாய் இருப்பதெல்லாம்
"தாய்" தான்


ரா.பிரீத்தி,
இளங்கலை இரண்டாமாண்டு


## இயற்கை எழுதும் விடியல்



ஆகாய வானில் வந்தது மித்திரனோ!
ஆனந்தமாய் மனதை மாற்றியவனோ!
இந்த வானம் இன்னும் நீளுமோ!
அதை எண்ணி மனம் வருந்துமோ!
உன்னைக் காண இருகண்கள் போதுமோ
உன்னதமான நேரம் இன்னும் வேண்டுமோ
எண்ணிப்பார்த்த போதெல்லாம் வியந்தேன்
எண்ணியவருக்கு இந்த நிலையேன்?
ஒருநாளும் தவறாமல் வந்ததனால்
ஒருநொடியும் மறக்கவில்லை அதனால்...?


ம.தாரணி,
இளங்கலை இரண்டாமாண்டு






செ.ராகவி,
இளங்கலை முதலாமாண்டு



மு.கீர்த்திகா,
இளங்கலை முதலாமாண்டு




## ஹிட்லர் பொம்மை (சிறுகதை)

தன் அப்பாவின் சட்டையை இறுக்கிப் பிடித்துக்கொண்டு வண்டியின் பின்னால் உட்கார்ந்த படியே வழியில் வரும் மரங்களை எண்ணிக் கொண்டே வந்தான் கலையழகன்.

'ஒன்'

'டூ'

'த்ரீ'

' பைவ்'

ஃபைவ் இல்லடா ஃபோர் என்றார் மூர்த்தி, தன் மகனின் விரல்களை தடவியபடியே. அவன் சட்டென அமைதியானான். சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. மூர்த்தியின் நினைவு எட்டு வருடம் பின்னோக்கி பயணித்தது.

'டாக்டர், டாக்டர் எப்பிடி இருக்காங்க என் மனைவி? எவ்வளோ வேனா செலவு பண்ண தயாரா இருக்கேன். ஏதும் ஆகாம பாதுத்துக்கங்க பிளீஸ்'.

பொறுமை,பொறுமையா இருங்க மூர்த்தி, we try our level best so please என்றார் டாக்டர் பரபரப்பாக. மணித்துளிகள் கடந்தது. மூர்த்தி தன் கைகளால் முகத்தை பொத்தியபடியே உட்காந்திருந்தார்.

'அதான, ஜாதகம், நல்ல நாள்லாம் பார்த்து பெரியவங்க கலியாணம் பண்ணி வெச்சிருந்தா எல்லாம் நல்லபடியா நடந்து இருக்கும். யாரையும் மதிக்காம தன்னோட விருப்பம்ன்னு போனியே. பாரு எப்பிடி ஆகிருச்சு நெலம, எட்டு வருஷமா ஒரு புழு. பூச்சி கூட இல்லாம ஏதோ இப்போதான் உண்டாச்சு. அதுவும் வாழ்வா சாவா போராட்டமா இருக்குது'. என்றாள் மூர்த்தியின் அம்மா. முகத்தில் கவலை இல்லை.

மாறாக வெறுப்பு ஆடியது. மூர்த்தி எதையும் காதில் வாங்காமல் உட்கார்ந்திருந்தார். இரண்டு மணிநேரம் ஓடியது.

' மிஸ்டர் மூர்த்தி' டாக்டர் அழைத்தார்.

'டாக்டர் சொல்லுங்க' என்றார் வேகமாக.

'உங்க மனைவிக்கு ஒன்னும் ஆகல. She is perfectly all right'

மூர்த்தி கண்களில் நீர் பெருக. டாக்டரின் கையைப் பிடித்துக் கொண்டு சிரித்த படியே 'ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்'

'ஆனா, உங்க குழந்தைக்கு கொஞ்சம் ஊட்டச்சத்து குறைபாடு கொஞ்சம் இருக்கு

மூர்த்தியின் சிரிப்பு மறைந்து,முகம் வெளிரி,டாக்டரைப் பார்த்து.

'அய்யோ, டாக்டர் அத குணப்படுத்த முடியுமில்ல'

'Yes, ofcourse அது abnormal stage–லாம் இல்ல அதுவா ஒருநாள் சரியாயிடும். Medicine எடுத்துக்கலாம்'

தன்னுடைய வயிற்றில், தன் மகன் கையால் திடீரென கிள்ள, நினைவு வந்தவாரக,

நிறுத்துறேன், நிருத்துறேன்டா செல்லம்,. பார்த்துட்டேன்'. வண்டி ஒரு பெரிய கடையின் முன்னால் நின்றது. பளபளக்கும் கண்ணாடி வாயிற்கதவு.கடை முழுக்க வண்ண விளக்கு வெளிச்சத்தால் நிரப்பப்

பட்டிருந்தது. அங்கங்கு தொங்கும் காகித மலர்கள், 'இது புதியதாக திறக்கப்பட்ட கடை' என்பதைக் காட்டியது. சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டு ஜொலித்தது. வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே சென்றனர்.

' Joy Toys' எங்களிடம் அனைத்து வகையான Imported பொம்மைகள் கிடைக்கும். தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக! என்று வெளியில் தட்டி வைக்கப்பட்டு இருந்தது.

உள்ளே குளுகுளுவென ஏசி காற்று வீச, தனித்தனி வரிசையாக பல நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொம்மைகள். அத்தனை பொம்மைகளையும் பார்க்கவே அரை நாள் ஆகிவிடும் போல. நம் நாட்டின் பாரம்பரிய மர பொம்மைகள், சவுதியில் இருந்து வந்த ஒட்டகம், ஜப்பானில் இருந்து வந்திருந்த பாரம்பரிய உடை அணிந்திருந்த பொம்மை, அமெரிக்காவின் அடையாளமாக போர்வீரன் பொம்மை. எனப்பலவகை. 'பொம்மைகள் என்றால் சாதாரணமா? அந்த நாட்டின் கலாச்சாரததையும், சூழலையும் எடுத்துக்காட்டுகிறதே' என வியந்தார் மூர்த்தி.

'கண்ணா என்ன பொம்மை வேணுமின்னாலும் எடுத்துக்கோ சரியா' நெற்றியில் முத்தமிட்டார்.

ஆனால், அவன் வெறுமனே கண்களால் பார்த்துவிட்டு எல்லா பொம்மைகளையும் கடந்து சென்றான். பிடித்து இருக்கிறது பிடிக்கவில்லை என்ற எதையும் அவன் முகத்தைப் பார்த்து கணிக்க முடியவில்லை.மூர்த்தி அவனை கவனித்தார். அவன் பிறந்தது முதலே அவனுடைய இந்த நிலையைப் பார்த்து மிகவும் கவலை கொண்டாலும்,மருத்துவர் எட்டு வருடத்திற்கு முன் சொன்ன 'அதுவாக ஒரு நாள் சரியாகிவிடும்' என்ற அந்த ஒரு நாள் இன்றுதான் என்ற நம்பிக்கையுடன் காலைப்பொழுதில் கண் விழிப்பார். மற்ற பிள்ளைகளின் கேலிக்கு உண்டாவான் என்ற பயத்திலேயே எட்டு வயதாகியும் அவனை பள்ளிக்கு அனுப்பவில்லை. இந்தக் கவலையினாலேயே அவர் முழுவதும் மாறி இருந்தார். தனக்கு கீழே வேலை பார்ப்பவர்களிடம் அடிக்கடி கோபம் காட்டுவது. மனைவியிடம் அடிக்கடி வாக்குவாதம் என ஆளே மாறிப் போயிருந்தார். ஆனால், தன் மகனிடம் மட்டும் எவ்வளவோ சந்தோஷத்துடன் கூடிய சகிப்புத்தன்மை உண்டு அவருக்கு. தான் கண்டெடுத்த முத்தல்லவா !

எதையோதையோ நினைத்துக்கொண்டே நடந்து கொண்டிருந்த அவர் சட்டென திரும்பிப் பார்த்தார். தன் மகன் ஒரு பொம்மையை கையில் வைத்துக்கொண்டு ஆர்வமாக பார்த்துக்கொண்டு இருந்தான்.

வருடம் 2009.

'டே இன்னைக்கு எல்லாரும் சினிமா பாக்க போலாம், காலேஜ் முடிச்சு அப்படியே கிளம்புறோம்'. எனக் கூறினான் மூர்த்தியின் உயிர் நண்பன் தாமஸ்.

'போதும்டா உங்க சினிமா. Final year வந்தாலும் வந்தோம் வாரா வாரம் ஒரு படமா சாமி' என்றான் மூர்த்தி.

நீ வந்து பாரு அப்புறம் தெரியும். Quentin Tarantino படம்டா, அடிதடி எல்லாம் இருக்கும். துப்பாக்கி எடுத்து சரமாரி தாக்குதல் தான். வா,வா நல்லாருக்கும் டா'.

குழுவாக 7 பேர் திரையரங்கின் முன் நின்றனர்.

'அடேய்,என்னடா படம் இது' கண்கள் விரிய, போஸ்டரை பார்த்தான் மூர்த்தி 'inglorious Basterds'– ன்னு போட்டுருக்கு. படம் பேரே இதுதானா, கிழிஞ்சிது போ'.

'பேசாம வாடா உள்ள, உலக சினிமா பாத்துட்டு வரலாம்' என்றான் தாமஸ்.

உள்ளே சென்று படம் ஆரம்பித்து பத்தாவது நிமிடத்தில், வீட்டிற்க்கு அடியில் ஒளிந்திருக்கும் யூதர்களின் மேல் துப்பாக்கிச்சூடு நிகழ்த்தப்பட்டது. பார்க்க முடியாத அளவுக்கு இரத்தம் ஆறாக ஓடியது.

'அய்யோ,என்னடா மனசாட்சி இல்லாம சுடுறானுங்க' என்றான் மூர்த்தி.

'ஹிட்லர் தன்னோட இராஜாங்கத்த விரிவு பண்ணிக்கிட்டிருந்தப்போ, அவன் போற வழியில் எல்லாம்,உள்ள புகுந்து ஆட்டத்த கெடுக்க ஒரு குழு இருந்து இருந்தா எப்படி இருக்கும்னு ஒரு கற்பனை. நாஜிப்படையும் ஹிட்லரையும் பார்த்தாலே கொதிச்சுப்போற அந்த குழுப்பேரு தான் 'The Inglorious Basterds' ஹிட்லரையே கோமாளியாக்கி அவனுக பண்ற எதிர்த்தாக்குதல் தான் இந்த படம்' என்று கதையை சுருக்கமாக சொன்னான் தாமஸ்.

' ஓ, அப்படியா கதை, பார்த்துருவோம் அதையும்' என்று படத்தை ஆர்வமாக பார்க்க ஆரம்பித்தார். படம் விறுவிறுப்பாக சென்று இறுதியில் கதாநாயகனின் குழு ஹிட்லரை சரமாரியாக சுட்டு வீழ்த்தியதைப் பார்த்ததும் விசில் அடித்தனர் மூர்த்தியும் குழுவும். அடுத்த நாளே ஹிட்லரைப் பற்றி ஒரு புத்தகத்தைப் படித்தார். ஒரு சிறிய அறையில் பல நூறு மக்களை அடைத்து வைத்து விஷவாயுவைத் திறந்து விட்டுக் கொன்றது, மூட நம்பிக்கையால் தினமும் ஒரு யூதரைக் கொன்றது, பல இலட்சம் மக்களை கொன்று குழியில் போட்டு நிரப்பியது போன்ற பல செய்திகளைப் படித்த பின் 'ச்ச.. இவ்வளோ கொடும பண்ணி இருக்கானா' எனக் கோவம் கொப்பளித்தவராக புத்தகத்தை மூடினார்.

தன் மகனின் கையில் "சுவஸ்திக்" முத்திரை பொறிக்கப்பட்டு கையை நேராக நீட்டியபடி 'Hail Hitler' என்ற வாசகம் பொறிக்கப்பட்டு, சுட்டு விரல் அளவுள்ள மீசையுடைய அந்த ஹிட்லர் பொம்மையைப் பார்த்ததும் அதிர்ச்சியுடன் சிறிது கோபமும், தயக்கமும் ஏற்பட்டது. நேராக அவனிடம் சென்று,

' கண்ணா, கொண்டாங்க கொண்டான்க அத, இது வேணாம்பா சரியா. உனக்கு வேற பொம்மை வாங்கிக்கலாம்' என்றபடி பொம்மையைத் தொட்டார்.

' ஊஹும்' என்றவன் பொம்மையை நெஞ்சுப்பக்கம் அணைத்து சிணுங்கினான் கலை. தன் மகனிடம் அதட்டிப் பேசவும் முடியவில்லை. என்ன செய்வதென்றும் தெரியாமல் கோபத்தில் இருக்கும் போது,

Any Help Sir? என்று சிரித்தபடியே பக்கத்தில் வந்து நின்றான் அங்கு வேலை பார்ப்பவன்.

அவ்வளவுதான். முடிந்தான். மூர்த்திக்கு இதை விட வேறு ஆள் வேண்டுமா என்றபடி முகம் சிவக்க அவனைப்பார்த்து,

'Fools, உங்களுக்கெல்லாம் அறிவுன்னு எதாச்சும் இருக்கா இல்லையா? என்னய்யா இது. இந்த பொம்மையெல்லாம் விப்பீங்களா? எவ்வளவு குழந்தைங்க வர இடம் இதெல்லாம் விக்கணும்ன்னு அவசியமா? என்று தன் மகன் கையில் இருந்த ஹிட்லரை சுட்டிக் காட்டினார்.

' சாரி சாரி சார். இது மொத்தமா ஒரு இடத்தில இருந்து காண்ட்ராக்ட்ல வர Toys சார். இந்த பொம்மை ஒரு பீஸ் தான் வந்து இருக்கு. அத தான் தம்பி கையில வெச்சு இருக்கான். ஒளிச்சு தான் சார் வெச்சு இருந்தோம். சாரி சார். அத குடுத்து வேற வாங்கிக்கங்க சார்' என்று பேச்சை மென்று முழுங்கினான்.

' போயா... குழந்த திருப்பி தருவானா, அதான் வேணும்ன்னு நிக்கிறான். என்ன பண்ண சொல்ற. பேசுறான் பேச்சு. போயா அந்த பக்கம் ' என்று தன் மகனைப் பார்த்தார். அவன் இங்கு நடந்த கலவரத்தையே கண்டு கொண்டதாக தெரியவில்லை. சரி வாங்கித் தருவோம் என்று அரை மனதாக முடிவெடுத்தார். வாங்கிவிட்டு வெளியே வரும்போது தன்னுடைய அலுவலகத்தில் கிளார்க் வேலை பார்க்கும் நேசனைப் பார்த்தார்.

நேசனுக்கு வயது 55 இருக்கும். மூர்த்தியிடம் வாங்காத பேச்சு இல்லை. வயதுக்கு கூட மதிப்பில்லாமல் பல வார்த்தைகளை நேசனிடம் கொட்டியிருப்பார் மூர்த்தி.

' உனக்கு அறிவுதான் இருக்கா ? களிமண்ணா' என்றெல்லாம் கோபத்தை காட்டியிருக்கிறார், இதையெல்லாம் தாண்டியும் சூடான தேநீரைக் கூட முகத்தில் ஊற்றப் போய்,ஏதோ நினைவு வந்தவராக நிறுத்தியிருக்கிறார். இந்த நிகழ்வை எல்லாம் பார்த்த பின்பு அலுவலகத்தில் உள்ள மற்றவர்களும் மூர்த்தியிடம் நெருங்க சற்றே தயக்கம் கொள்வர்.

' வணக்கம் சார்' பார்த்துவிட்டோமே என்ற கடமைக்காக வணக்கம் வைத்தார் நேசன்.

'வாயா, நேசா' என்று கடுகடுப்புடன் சொன்னார் மூர்த்தி. வேறு எதுவும் பேசுவதற்கு இல்லாதது போல் அமைதியாக மூரித்தியின் முகத்தை பார்த்தபடியே நின்றிருந்தார் நேசன். பக்கத்தில் தனது பேரன் இருக்கிறான் என்ற பயம் வேறு. 'பேரன் முன்னால் திட்டு வாங்கக்கூடாது' என்ற முன்னெச்சரிக்கையும் கூட மூர்த்தி எதுவும் பேசாமல் கடந்து சென்றார்.

'ம் ஹ் ம் என்ன மனுசனோ' என்று தலையில் அடித்துக்கொண்டு சென்றார் நேசன்.

வீட்டிற்குள் நுழைந்தவுடன் தனது மனைவி உணவு பரிமாறுவதற்கு தயாராவதைக் கண்டார். மூர்த்திக்கோ கோபம் இன்னும் இறங்கவில்லை. நேராக அறையினுள் சென்று தாழிட்டுக் கொண்டார். அல்லி பெருமூச்சு விட்டாள். எப்போதுதான் அவர் பழையபடி மாறுவார் என்ற எண்ணம் தோன்றியது. காதலிக்கும் போது இருந்த அந்த மூர்த்தியைத் காண்பதே அரிது. அவரின் இந்த நிலைக்கு தான்தான் காரணமோ என்ற எண்ணமும் அவ்வப்போது அவளை சூழ்ந்து கொள்ளும். சூழ்நிலைகளும் சிலநேரம் அவர்கள் இருவருக்கு நடுவிலும் பிரிவை ஏற்படுத்தும், மனதாலும் உடலாலும். சில இரவுகளில் தன் மனைவிக்கு பாசமாக நெற்றியில் முத்தமிடுவார் மூர்த்தி. குழந்தை அழுக ஆரம்பித்து விடுவான் மற்ற குழந்தைகள் போல் இல்லை. இவனை சமாதானம் செய்வதற்கே நெடுநேரம் ஆகி, அப்படியே தூங்கி விடுவர். பல நாட்கள் இந்த கதைதான்.

தனது புதிய நண்பனுடன் வீட்டிற்குள் நுழைந்து சிரித்து சிரித்து விளையாடிக்கொண்டிருந்தான் கலை. அதை கவனித்த அவன் அம்மாவிற்கு ஆச்சரியம்! ஏனெனில், அவன் அவ்வளவு நேரம் புன்னகையுடன் இருந்ததே இல்லை. அந்த அழகின் சிரிப்பைக் கண்டதும், மனதிலுள்ள பாரம் அனைத்தும் நொருங்கிப் போனதுபோல ஒரு உணர்வு. பாசமாக நெற்றியில் முத்தமிடும்போது, தன்னையறியாமல் வந்த ஆனந்த கண்ணீர் தன் மகனின் தலையத் தடவியது. அவன் சிரித்துக்கொண்டே அந்த சர்வாதிகாரியின் கையை இழுத்து இழுத்து விளையாடிக்கொண்டிருந்தான்.

கலை அந்த பொம்மையிடம் பேசத் தொடங்கினான். அவனாகப் பேசவில்லை, அவன் அப்பாவகப் பேசினான், அம்மாவாகப் பேசினான், தாத்தாவாகப் பேசினான். ஆம், பெரியவர்கள் என்ன பேசுகிறார்களோ, அதை உள்வாங்கிக்கொண்டு, ஹிட்லரிடம் பேசி அதிகாரம் செய்தான். அப்பா அம்மாவிடம் பேசுவதில்லை. பெற்றோர்களுக்கு இதுவே பெரிய மன திருப்தியாக இருந்தது. எட்டு வருடத்தில் அவனின் மழலைப் பேச்சைக் கேட்க என்னவெல்லாம் பாடுபட்டார்கள், எல்லாம் மாறிவருகிறது என்று பூரிப்படைந்தார்கள். மூர்த்தியின் முகம் இந்நாட்களில் பிரகாசமாக ஜொலித்தது. மன அழுத்தம் குறைந்து தன் உடலும் மனமும் இலேசாக மிதப்பதை உணர்ந்தார். தேநீரை முகத்தில் ஊற்றப்போன நேசனைப்பார்த்து 'என்னய்யா நேசா.. டீ சாப்பிடுகிறாயா' என்று கேட்கும் அளவிற்கு கனிந்தார். அல்லி ஆசைப்பட்ட மூர்த்தியாக மாறினார் !

அன்று காலையில், அல்லி தலைக்கு குளித்து விட்டு முகம் முழுவதும் வெட்கப் புன்னகையுடன் இரண்டு கோப்பை தேநீரைக் கொண்டு வந்து ஒன்றை மூர்த்தியிடம் நீட்டி விட்டு,

' ரொம்ப Refreshing–ஆ இருக்கு மூர்த்தி' என்று கூறி வெட்கிச் சிரித்தாள். மூர்த்தியும் லேசான புன்னகையுடன் பால்கனியில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

' ம்மா... ப்பா...' என்று குரல் கேட்டது.

இந்த வார்த்தைகளை கேட்க தவம் இருந்த அந்த இருவரும் மகிழ்ச்சியுடன் திரும்பி பார்த்த போது கண்ணைக் கசக்கிக்கொண்டு சிரித்தபடியே நின்றுகொண்டிருந்தான் கலை. கையில் ஹிட்லர் பொம்மை.

லா.முகமது யூசுப்,

முதுகலை இரண்டாமாண்டு

---

**"யாதுமாகி"–யின் மாதாந்திர மின்னிதழ் வாசிப்பு மற்றும் இலக்கியத் தேடல்களுக்கு**

http://yaadhumaagitamil.blogspot.com/

**"யாதுமாகி"–யின் மாதாந்திர மின்னிதழ் பதிவிறக்கத்திற்கு**

*www.jmc.edu*

**மாணவர்கள் தங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்**

*yaadhumaagitamil@gmail.com*